# இராசிபுரம் நகராட்சி

## நகர்மன்ற அவசரக் கூட்ட அறிவிப்பு

2026–ஆம் வருடம் மார்ச் மாதம் 02–ஆம் தேதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இராசிபுரம் நகராட்சியின் அவசரக் கூட்டம் ஒன்று நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அது சமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் 25.02.2026

தலைவர்,
நகர் மன்றம்

## பொருள்கள்

(1) இராசிபுரம் நகராட்சி கலைஞர் மேம்பாட்டுத் திட்டம் 2024–25–இன்கீழ் புதியதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்தில் 51 கடைகள், 2 உணவு விடுதிகள், 1 பொருட்கள் பாதுகாப்பு அறை, 1 கட்டண கழிப்பறை, இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் ஆகிய இனங்களுக்கு முன் ஏலம் (Pre Action) இணைப்பில் கண்டுள்ளவாறு உரிய குத்தகை தொகைக்கான அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(அ2/78/2026)

**தீர்மானம் எண். 846**

அனுமதி வழங்கப்படுகிறது.

(2) இராசிபுரம் நகராட்சியில் தற்போது குடிநீர் பணிகள் செய்ய நிரந்தர ஆட்கள் இல்லாததால் ஏற்கனவே 13 நபர்கள் அமர்த்தி பணி செய்யப்பட்டு வருகிறது. தற்போது 31.07.2025–இல் மேலும் ஒரு நபர் பணி ஒய்வு பெற்றதால் பற்றாக்குறை உள்ளது. மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் மாவட்டம் அவர்களின் ந.க.எண். 647/2027, நாள் 16.09.2024 வர்த்தமானி அறிவிப்பின்படி ஊதிய உயர்வு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி இயக்குவதற்கு நபருக்கு ஒரு நாள் ரூ. 716/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட வர்த்தமானி விகிதப்படி 14 நபர்கள் அமர்த்திக் கொள்ளவும், கீழ்கண்ட விவரப்படி ஒரு நபருக்கு செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | ஒரு நாள் ஊதியம் | நபர்களின் எண்ணிக்கை ஒரு நாள் ஊதியம் | 14 நபர்களுக்கு மாத ஊதியம் | மொத்த செலவினம் (12 மாதங்களுக்கு) |
|---|---|---|---|---|
| 1 | ரூ.716/- | ரூ. 716/- x 14 = ரூ. 10024/- | ரூ. 10024/- x 30 = ரூ. 3,00,720/- | ரூ. 3,00,720/- x 12 = ரூ. 36,08,640/- |
| 2 | | | EPF 13.61% | ரூ.4,91,136/- |
| 3 | | | ESI 4.75% | ரூ.1,71,410/- |
| | | | **மொத்தம்** | **ரூ.42,71,186/-** |

மேற்கண்ட மதிப்பீட்டின்படி ரூ. 42,71,186/-க்கு 14 நபர்களுக்கு 12 மாதங்களுக்கு பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்கண்ட செலவினத்தொகை விதிகளுக்குட்பட்டு குடிநீர் நிதியிலிருந்து 12 மாதங்களுக்கு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
இ) நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்கள் அனுமதிக்கு அனுப்பி அனுமதி பெறலாம்.

(3817/2021/இ2)

**தீர்மானம் எண். 847**

அனுமதி வழங்கப்பட்டது.

( 3 ) இராசிபுரம் நகராட்சி, பொது சுகாதாரப் பிரிவில் பொது சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள பிளிச்சிங் பவுடர், சுண்ணாம்புத் தூள், பினாயில் மற்றும் கழிவறை சுத்தம் செய்யும் ஆசிட் ஆகிய கிருமி நாசினிகள் அதன் தர நிர்ணயத்திற்குட்பட்டு வழங்கும் பணிக்கு, இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண். 698, நாள் 28.05.2025–இல் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு,

| வ எ ண் | பொருள் விவரம் | எண்ணிக்கை | M/S Sri Kaliyamman Trading Corporation | M/S Sri Athanuramman Traders |
|---|---|---|---|---|
| 1 | நீர்த்த சுண்ணாம்புத் தூள் | ஒரு கிலோ | ரூ.9.45/– | ரூ.10/– |
| 2 | பிளீச்சிங் பவுடர் | ஒரு கிலோ | ரூ.47.20/– | ரூ.49/– |
| 3 | பினாயில் | ஒரு லிட்டர் | ரூ.76.70/– | ரூ.80/– |
| 4 | ஆசிட் | ஒரு லிட்டர் | ரூ.59/– | ரூ.62/– |

மேற்படி பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. Sri Kaliyamman Trading Corporation, மோகனூர், நாமக்கல் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(0907/2025/எச்1)

**தீர்மானம் எண். 848**

மன்றம் அனுமதிக்கின்றது.

(4) இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணியில் பயன்படுத்தப்பட்டு வரும் டிப்பர் லாரி TN 28 AS 0110–இன் தகுதி சான்று முடிவடைந்துவிட்டதால் தகுதி சான்றை புதுப்பிக்க பழுதுநீக்கம் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. பழுது நீக்கப் பணிகளை வாகனத்தின் தயாரிப்பு நிறுவனத்திலோ அல்லது அதன் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திலோ மேற்கொள்ளவும் அதற்கான செலவின தொகை ரூ. 2.5 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(337/2026/எச்1)

**தீர்மானம் எண். 849**

அனுமதி வழங்கப்படுகிறது.

( 5 ) இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணியில் பயன்படுத்தப்பட்டு வரும் டிப்பர் லாரி TN 28 AS 0104–இன் தகுதி சான்று முடிவடைந்து விட்டதால் தகுதிசான்றை புதுப்பிக்க பழுதுநீக்கம் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. பழுது நீக்கப் பணிகளை வாகனத்தின் தயாரிப்பு நிறுவனத்திலோ அல்லது அதன் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திலோ மேற்கொள்ளவும் அதற்கான செலவின தொகை ரூ. 2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(338/2026/எச்1)

**தீர்மானம் எண். 850**

அனுமதி வழங்கப்பட்டது.

( 6 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 26 காந்தி நகர் வடக்கு தெருவில் சாலையின் நடுவில் அமைந்துள்ள கைப்பம்பை அகற்ற நகர் மன்ற உறுப்பினர் கடிதம் அளித்துள்ளார். ஆழ்துளைக் கிணற்றுடன் இணைந்த இக்கைப்பம்பில் உப்புநீர் நெடுநாட்களாக வராமல் பழுதடைந்து, முற்றிலும் உபயோகத்தில் இல்லாத நிலையிலும், பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலும் அமையப்பெற்றுள்ளதால் இதனை அகற்றிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகராட்சி சொத்தாக்க பட்டியலில், ஆழ்துளைக் கிணற்றினை கம்பி பிளேட் கொண்டு மூடி கைப்பம்பினை அகற்றுவதை பதிவேற்ற மன்றம் அனுமதிக்கலாம்.

(0210/26/இ2)

**தீர்மானம் எண். 851**

அனுமதி வழங்கப்பட்டது.

( 7 ) இராசிபுரம் நகராட்சிக்கு Project Sanctioning and Monitoring Committee Minutes நாள் 30.04.2025 கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் KNMT (2025-26) ரூ. 47.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இப்பணிக்கு 25.08.2025–ஆம் தேதி பணியாணை வழங்கப்பட்டது. தற்போது மதிப்பீட்டில் உள்ள 873 மீ. நீளத்தில் 489.85 மீ. நீளத்திற்கு புதிய மழைநீர் வடிகால் மற்றும் 250.15 மீ. மழைநீர் வடிகால் பக்கவாட்டு உயர்த்தும் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேலும் மீதமுள்ள திட்ட நிதியில் மதிப்பீட்டில் இல்லாத புதிய வடிகால் பணிகள் செய்வதற்கு சாக்கடை நீர் தேங்கி சுகாதாரகுறைவாக உள்ள 1, 6, 7, 9, 15, 20 மற்றும் 23 வார்டுகளுக்குட்பட்ட கீழ்க்கண்ட இடங்களில் நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கையின்படி, சிறுபாலங்கள் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்க பொது மக்களின் நலன் கருதி மீதமுள்ள திட்ட நிதியில் திட்ட மதிப்பீடு தொகைக்குட்பட்டு ஒப்பந்த விலை விகிதத்தில் அதே ஒப்பந்ததாரர் திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரரைக் கொண்டு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மழைநீர் வடிகால் நீளம் (மீ.) | சிறுபாலங்கள் (எண்ணிக்கை) |
|---|---|---|---|---|
| 1 | 1 | மேற்கு காலனி | - | 2 |
| 2 | 6,7 | பிற்பட்டோர் காலனி, வி. நகர் எண். 1 கிராஸ் 4 | 130.00 | 3 |
| 3 | 9 | வி. நகர் 1 மற்றும் 2 | 120.00 | 1 |
| 4 | 15 | தேசாய் பெருமாள் சந்து, காமாட்சி பெருமாள் சந்து, கிராம முன்சீப் சந்து, சி.பி.கண்ணையா தெரு ( சிட்டி யூனியன் பேங்க் அருகில்) | 35.00 | 3 |
| 5 | 20 | காளியம்மன் கோவில் தெரு | 130.00 | - |
| 6 | 23 | சுண்ணாம்பு சாலை தெரு | 80.00 | - |
| | | **மொத்தம்** | **495.00** | **9** |

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் KNMT (2025-26) மதிப்பீட்டு தொகைக்குட்பட்டு மாற்று இடங்களில் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1048/25/இ1)

**தீர்மானம் எண். 852**

அனுமதி வழங்கப்பட்டது.

( 8 ) இராசிபுரம் நகராட்சிக்கு நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களது செயல்முறை ஆணையின்படி ந.க.எண். 9999/2025/SS2, நாள் 30.05.2025 CGF & Operation and Maintenance Deficit Grant Fund திட்டத்தின்கீழ் (2025-26) ரூ. 37.00 இலட்சத்திற்கு வடிகால் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இப்பணிக்கு 25.08.2025–ஆம் தேதி பணியாணை வழங்கப்பட்டு தற்போது மதிப்பீட்டில் உள்ள 789.40 மீ. நீளத்தில், 565.40 மீ. நீளம் வரை வடிகால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் மீதமுள்ள திட்ட நிதியில் மதிப்பீட்டில் இல்லாத புதிய மழைநீர் வடிகால் பணிகள் செய்வதற்கு சாக்கடை நீர் தேங்கி சுகாதார குறைவாக உள்ள 3, 4, 5 மற்றும் 22 ஆகிய வார்டுகளுக்குட்பட்ட கீழ்க்கண்ட இடங்களில் நகர் மன்ற உறுப்பினர்களின் கோரிக்கையின்படி சிறுபாலங்கள் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்க பொது மக்களின் நலன் கருதி மீதமுள்ள திட்ட நிதியில் திட்ட மதிப்பீடு தொகைக்குட்பட்டு ஒப்பந்த விலை விகிதத்தில் அதே ஒப்பந்ததாரர் திரு ஆர். பிரகாசம் அவர்களைக் கொண்டு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மழைநீர் வடிகால் நீளம் (மீ.) | சிறுபாலங்கள் (எண்ணிக்கை) |
|---|---|---|---|---|
| 1 | 3 | சிவானந்தா சாலை ( குமரன் பேக்கிரி அருகில்) | 75.00 | - |
| 2 | 4 | மல்லி தெரு மற்றும் கிருஷ்ணன் சந்து | - | 2 |
| 3 | 22 | காதர் தெரு | 15.00 | 1 |
| | | **மொத்தம் :** | **90.00** | **3** |

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பெரு மூலதன நிதியில் (CGF & Operation and Maintenance Deficit Grant Fund) மதிப்பீட்டு தொகைக்குட்பட்டு மாற்று இடங்களில் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(1266/25/இ1)**

**தீர்மானம் எண். 853**

அனுமதி வழங்கப்பட்டது.

**(9)** இராசிபுரம் நகராட்சியில் IUDM 2013 – 14 திட்டத்தில் பாதாள சாக்கடை அமைக்க ரூ. 55.42 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு இப்பணி 2020–21-ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளது. இப்பணியில் 10000 வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்க மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இப்பணி நடைபெறும் போது 7024 இணைப்புகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தில் 60.89 கி.மீ. நீளத்திற்கு புதை வடிகால் குழாய்கள், 2127 எண்ணிக்கை இயந்திரக்குழிகள் (Machine Hole), 6 எண்ணிக்கை கழிவு நீரேற்று நிலையங்கள், 1 எண்ணிக்கை பிரதான கழிவு நீரேற்று நிலையம், 6.96 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவை அமைக்கப்பட்டு 01.02.2021 முதல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவர்களின் பராமரிப்பு காலம் 31.01.2026 அன்று முடிவதால் அதன் பின்னர் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் தொடந்து பராமரிக்கப்பட வேண்டியுள்ளது. இதற்கு வெளிக்கொணர்வு முகமை (Out sourcing) மூலம் ஆட்கள் அமர்த்திக் கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21787/2021/EA2, நாள் 02.10.2021-இன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டது. மேலும் செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பாதாள சாக்கடை திட்டம், இராசிபுரம் அவர்களின் கடித எண். 2602/F.UGSS RPM/JDO/SEW DN/RPW/2025, நாள் 06.01.2026-இல் நகராட்சிக்கு ஒப்படைக்க கடிதம் வரப்பெற்றுள்ளது. மேலும் நகராட்சி பொறியாளர் (பொறுப்பு) இராசிபுரம் மேற்கண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீர் உந்து நிலையத்தை நேராய்வு செய்தபோது சில மின் மோட்டார்கள் பராமப்பின்றி இயங்காமல் உள்ளதாகவும், தர ஆய்வகத்தில் குறைபாடுகள் உள்ளதும் அறியப்பட்டது. எனவே கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீர் உந்து நிலையத்தை நகராட்சி பராமரிப்பில் பெற்றுக்கொள்வதற்கு முன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் ஒப்படைக்கப்படவுள்ள மோட்டாரின் ஓடு தரம் (Electricity) மற்றும் இதரப்பணிகளை மூன்றாம் நபர் (Third Party Inspection) மூலம் ஆய்வு செய்து அதன் அறிக்கையின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவித்ததன்பேரில், மேற்கண்ட ஒப்படைப்பு இனங்களை மூன்றாம் நபர் மூலம் (Third party Inspection) ஆய்வு செய்து அறிக்கை பெறவும் அதற்கான செலவினத்தினை பாதாள சாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(3814 /2011/இ2)

**தீர்மானம் எண். 854**

அனுமதி வழங்கப்பட்டது.

( 10 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 19, காட்டூர் முதல் சந்திரசேகரபுரம் வரை செல்லும் வழியில் புதியதாக தார்சாலை, நெடுஞ்சாலைத் துறை மூலம் அமைக்கப்பட்டு வருகிறது. அதன்படி அவர்கள் Wet mix அமைத்து முடித்துவிட்டதாகவும் உடனடியாக தார்சாலை அமைக்க வேண்டியுள்ளது. எனவே இதில் நகராட்சிக்குச் சொந்தமான 7 எண்கள் பாதாள சாக்கடை Machine Hole உள்ளதால் இதனை உயர்த்திக் கொள்ள நெடுஞ்சாலை துறையினர் தெரிவித்தனர். எனவே இப்பணியின் அவசரம் அவசியம் கருதி செலவினத்தொகை ரூ. 24,000/-ற்கு 02.02.2026–ஆம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டு, வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | M/S. ஹர்சிதா கன்ஸ்ட்ரக்ஷன், சேந்தமங்கலம் | ரூ. 24000/- (18% GST உட்பட) |
| 2 | திரு M .P. கான்ட்ராக்டர், இராசிபுரம் | ரூ. 25000/- (18% GST உட்பட) |
| 3 | திரு R.S. ரங்கசாமி ஒப்பந்ததாரர், இராசிபுரம் | ரூ. 26000/- (18% GST உட்பட) |

இவ்விலைப்புள்ளியில் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள M/S. ஹர்சிதா கன்ஸ்ட்ரக்ஷன், சேந்தமங்கலம் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணியானை வழங்கப்பட்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை வழிகாட்டுதலின்படி Section 57(7) பணி செய்தமைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை வழிகாட்டுதலின்படி Section 57(7) பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

இ) இச்செலவினத்தை பாதாள சாக்கடை கட்டண வசூல் நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(0264/2026/இ2)

**தீர்மானம் எண். 855**

அனுமதி வழங்கப்பட்டது.

( 11 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்டப் பகுதிகளில் நிர்ணயம் செய்யப்பட்ட சொத்துவரி, காலிமனை வரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடைக் கட்டணம், வரி விதிப்புதாரர்களால் உரிய காலக்கெடுவிற்குள் செலுத்தக்கோரி சம்மந்தப்பட்ட வரி விதிப்புதாரர்களுக்குண்டான வரித்தொகையினை செலுத்தவும் குடிநீர் விநியோகம் தொடர்பாக பொது அறிவிப்புகள் SMS, குறுந்தகவல் செல்பேசி மூலம் தகவல் தெரிவிக்க

Blue Square Group (MSME Registered) நிறுவனம் திரு S. கௌதம் என்பவரால் (Quotation) விலைப்புள்ளி வழங்கப்பட்டது.

அதன்படி அனைத்து வரி விதிப்புதாரர்களுக்கு அவரவர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட வரித்தொகையினை செலுத்த SMS மூலம் தகவல் அனுப்ப உத்தேச செலவினம் ரூ. 1,33,000/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(80/26/அ1)

**தீர்மானம் எண். 856**

அனுமதி வழங்கப்பட்டது.

( 12 ) இணை இயக்குநர் (கண்காணிப்பு) நகராட்சி நிருவாக இயக்குநரகம். சென்னை அவர்களால் 17.11.2025–ஆம் தேதி இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட திட்டப்பணிகள், தட்டான் குட்டை சாலையில் உள்ள உரக்கிடங்கு, நுண்ணுயிர் செயலாக்க மையம் மற்றும் வளமீட்பு மையம் ஆகியவை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் ஒரு அரவை இயந்திரம் மட்டுமே உள்ளதாகவும் இரண்டு நுண்ணுயிர் மையத்திற்கு இது போதாது எனவும், கூடுதலாக ஒரு இயந்திரம் வாங்கவும் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி நரசிங்கபுரம் நகராட்சியிலிருந்து ஒரு ஷெட்டர் மிஷின் பெறப்பட்டது. இந்த இரண்டு இயந்திரங்களுக்கும் மின்இணைப்புகள் வழங்கி இயக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள, ஆணையாளர் மற்றும் சுகாதார அலுவலர் தெரிவித்தற்கிணங்க ரூ. 40000/–ற்கு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. இப்பணிக்கு அவசரம் அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **விலைப்புள்ளித் தொகை** |
|---|---|---|
| 1 | திரு R.S. ரங்கசாமி, ஒப்பந்ததாரர், இராசிபுரம் | ரூ. 33860/-<br>(18% GST நீங்கலாக) |
| 2 | திரு A. சுப்ரமணி, ஒப்பந்ததாரர், இராசிபுரம் | ரூ. 6250/-<br>(18% GST நீங்கலாக) |
| 3 | திரு R.சதிஷ்குமார், ஒப்பந்ததாரர், இராசிபுரம் | ரூ. 35090/-<br>(18% GST நீங்கலாக) |

இவ்விலைப்புள்ளியில் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள திரு R.S. ரங்கசாமி, ஒப்பந்ததாரர், இராசிபுரம் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணியானை வழங்கப்பட்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை வழிகாட்டுதலின்படி Section 57(7) பணி செய்தமைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை, அவர்களின் செயல்முறை வழிகாட்டுதலின்படி Section 57(7) பணி செய்தமைக்கு அனுமதிக்கலாம்.

இ) இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(0105/26/இ1)

**தீர்மானம் எண். 857**

அனுமதி வழங்கப்பட்டது.

( 13 ) இந்நகராட்சியில் செயல்பட்டு வரும் நுண்உரம் செயலாக்க மையம் எண். 2–ற்கு மக்கும் கழிவுகளை அரைக்கும் இயந்திரம் நரசிங்கபுரம் நகராட்சியிலிருந்து கொண்டு வரப்பட்டது. அதன் அரைக்கும் பகுதியானது முழுமையாக சேதமடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. அதனால் மேற்காணும் இயந்திரத்திற்கு மக்கும் கழிவுகளை அரைக்கும் பகுதியை மட்டும் புதியதாக வாங்கி வழங்க பொறியியல் பிரிவு மூலம் நடவடிக்கை எடுக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(379/26/எச்1)

**தீர்மானம் எண். 858**

அனுமதி வழங்கப்பட்டது.

ஒம்/– முனைவர் இரா. கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.